★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 23உ சனி (5—5—56) ★ :★ வெளியூர்: சித்திரை 24உ ஞாயிறு (6—5—56) [இதழ் 277

தனி நபர் நடத்தும் நடுத்தர பள்

சென்னை, மே 4

"நடுத்தரக் கல்வித்துறையில் தனிநபர் இடங்களுக்கு இடமில்லாமற் செய்ய வேண்டுமென்பது அரசினரின் விருப்பமல்ல; அவை நீடித்து செயலாற்ற வேண்டும் என்பதே அரசியலாரின் கருத்து; எனவே, அவற்றுக்கு தேவையான உதவிகளெல்லாம் தந்து அவை திறம்பட செயலாற்ற வேண்டுவது சர்க்காரின் கடமை,"

என்று, சென்னை நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் 'செகண்ட பள்ளி மாநாட்டில் கூறியுள்ளார்.

நாகர் கிளர்ச்சிக்கு நேருவின் பணிவு

மக்கள் விருப்பை ஏற்கத் தயாராம்

அமைதியான சூழ்நிலையில் அதற்கான முயற்சியாம்

அளித்துள்ள உரிமையை நாகர்கள் பயன்படுத்தவில்லையாம்

மக்கள் சபையில் நேரு பண்டிதரின் குரல் மாற்றம்!

புதுடில்லி, மே 4—

"அரசியல் சட்டப்படி நாகர் வாழும் மலைப் பகுதிக்கு, உயர்ந்த பட்சம் தன்னாட்சி உரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது. அவ்வுரிமையை அங்குள்ள மக்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

"நிலவி வரும் சூழ்நிலையில் அமைதி ஏற்பட்டவுடன், அந்தத் தன்னாட்சி உரிமையில் எத்தகைய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதுபற்றி ஆராயப்படும்.

"அத்தகைய மாற்றம் நாக மலை மக்களின் விருப்பத்திற்கிணங்க மேற்கொள்ளப்படும்."

இவ்வாறு, மக்கள் சபையில் எச். வி. காமத் கேட்ட கேள்வி ஒன்றுக்கு இந்தியப் பிரதமர் நேரு பதில் தந்துள்ளார்.

அவர் மேலும் இதுபற்றி குறிப்பிட்டுள்ளதாவது :—

"அம்மக்களின் நல்லெண்ணத்தைப் பெற இந்திய அரசாங்கம் எல்லாவகையிலும் இதுவரை முயன்றன; ஆனால், எதிர்ப்புச் சக்திகள் கொலையிலும், கொள்ளையிலும் ஈடுபடும்பொழுது, அவைகளை சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

"நாகர் தலைவரான பிஜோ, பாகிஸ்தானையோ, வேறு அன்னிய ஆட்சியையோ உதவி கோரினதாகத் தகவல் எதுவும் அரசாங்கத்துக்குத் தெரியாது; ஆனால், இரகசியத்தில் அவர் செய்திருக்கும் செயல் எதுவும் அரசாங்கத்திற்குத் தெரியவராது.

"எந்த ஒரு பகுதியோ அல்லது கிராமங்களோ நாக எதிர்ப்பாளர்களின் அடக்கத்தில் இல்லை ஆனால், கிளர்ச்சிக்காரர்களை இந்திய இராணுவம் துரத்திச் சென்ற நேரத்தில், அக்கிளர்ச்சிக்காரர்கள் ஆறு கிராமங்களில் பதுங்கிக் கொண்டனர்," என்ற தகவலை, மக்கள் சபையில், பிரதமரின் மக்கள் சபை காரியதரிசி அறிவித்தார்.

அவர், இதுவரை 54 நாகர் பெண்கள் கைது செய்யப்பட்டு இருப்பதாகவும், அவர்களில் 48-பேர்கள் தண்டிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அரசாங்க உத்தியோகம் பெறுவதற்குத் தடை

திருவனந்தபுரம், மே 4—

ஒரு மனைவி இருக்கையிலேயே மேலும் அதிகமாக மனைவியர்களைப் பெற்றிருப்பவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் தரப்படமாட்டாதென திருவாங்கூர்—கொச்சி அரசியலார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.

தக்க காரணங்களினால் அதிக மனைவிகளை வைத்திருப்பதாக அரசினருக்குத் தெளிவாகத் தெரியவருமாயின், உத்தியோக நியமனங்கள் சம்பந்தமாக அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமாம்.

'தட்சிணப் பிரதேச அமைப்புக்குத் தடைகள் பல உள்ளன'

'எதிர்க் கட்சியினரின் ஒப்புதல் பெற்றாக வேண்டும்'

'விரிவான புதிய மைசூர் சட்ட சபையில் அப்பிரச்சினை ஆராயப்படும்'

மைசூர் முதலமைச்சர் தரும் தகவல்

ஐதராபாத், மே 4—

"புதிய மைசூர், கேரளம், சென்னை ஆகிய மூன்று மாகாணங்களையும் கொண்ட தட்சிணப் பிரதேச அமைப்பில் எனக்குள்ள நம்பிக்கையை நான் இழந்து விடவில்லை. இருந்தாலும், அதை அடைவதற்கு, நாம் கடந்து செல்ல வேண்டிய தடைகள் இன்னும் அநேகம் இருந்து வருகின்றன."

இக்கருத்தை மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா அறிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"இப்போதுள்ள மைசூர் இராஜ்யம், தட்சிணப் பிரதேச ஏற்பாட்டிற்கு ஆதரவு காட்டி வருவது மட்டும் போதாது. அவ்வேற்பாடு குறித்து புதிய விரிவான மைசூர் இராஜ்ய சட்டசபையின் ஒப்புதல் பெறுவது இன்றியமையாததாகும்.

"இதுபற்றி காங்கிரஸ் சட்டசபை கட்சி மட்டுமே கருத்தறிவிப்பது போதாது. எதிர்க்கட்சியினரும் உள்ள முழு சட்டசபையின் ஒப்புதல் பெறுவதே அவசியமாகும்.

"தட்சிணப் பிரதேசம் அமைவதற்கு, அதில் இணைய வேண்டிய இராஜ்யங்களின் ஒப்புதல் பெற்றாக வேண்டியது கட்டாயமாகும்."

மனைவி இருக்க மற்றொருத்தியை மணப்பதா?

பலதார மண முறைக்கு எதிர்ப்பு

பாகிஸ்தான் மாதர் சங்கத்தின் இரண்டாம் போர்!

கராச்சி, மே 4—

கராச்சியில் ஆலை அதிபர் ஒருவர், எட்டு குழந்தைகளுக்குத் தாயாக முதல் மனைவி இருக்கும்பொழுது, இரண்டாவதாக ஒருத்தியை மணந்துகொள்ளும் முயற்சியை மேற்கொண்டுள்ளார். அதை எதிர்த்துப் பாகிஸ்தான் மாதர் சங்கம் போர் தொடுத்திருக்கிறது.

சென்ற ஆண்டில், முன்னாள் பிரதமராக இருந்த முகமது அலி, முதல் மனைவி இருக்க, இரண்டாம் மனைவியாக ஒருத்தியை மணந்துகொண்டதற்காக, இதே மாதர் சங்கத்தினர் முதற் போர்க் கொடியை உயர்த்தினர்.

தனது முதல் மனைவி எழுதப் படிக்கத் தெரியாதவள் எனக் காரணங்காட்டி, 20 வயதுடைய அழகி ஒருத்தியை மணக்க முன் வந்திருக்கிறார் இந்த ஆலை அதிபர்.

மாதர் சங்கத்தைச் சேர்ந்த 12 பெண்கள் ஆலை அதிபரைக் கண்டு 'எண்ணித் துணிக கருமம்' என்று எச்சரித்தனர். அதாவது, இரண்டாவது ஒருத்தியை மணப்பதற்கு முன், அது பற்றி பலமுறை சிந்தித்து முடிவிற்கு வரும்படி அப்பெண் தூதுக் குழுவினர் அவரைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால், ஆலை அதிபரோ, 'என் சொந்த விவகாரத்தில் குறுக்கிடாதீர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

பிரிட்டிஷ்படைத்தளங்கள்

இலங்கையில் இனி இருக்க இடமில்லையென அறிவிப்பு

"இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் படைத்தளங்கள் இனி இருக்கக் கூடாதென்று தீர்மானித்து விட்டோம்; பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் தெரிவித்து விட்டோம்,"

என்று, இலங்கை பிரதிநிதிகள் சபையில் முதலமைச்சர் பண்டாரநாயகா கூறியுள்ளார்.

காலவரையறையின்றி 35,000பேர்வேலை நிறுத்தம்

ஆள் குறைப்புக்கு எதிர்ப்பு

பூனா, மே 3—

பாதுகாப்புப் படை இலாகாக்களில் 'ஆட்குறைப்பு' செய்ய வேண்டாமென்று பூனா, கிர்கி, டேகு ஆகிய இடங்களிலுள்ள பாதுகாப்புப் படைச் சிப்பந்திகள் சுமார் 35,000 பேர் மே 21-ந் தேதி முதல் காலவரையறையின்றி வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனராம். வேலை நிறுத்த அறிக்கைகளும் மேலதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது எனத் தெரிகிறது.

மரண தண்டனையைத் தீர்த்துக்கட்ட முடிவு?

இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை

கொழும்பு, மே 3—

மரண தண்டனையை 3 ஆண்டுகளுக்கு 'சஸ்பெண்டு' செய்து அதன் நடைமுறையைப் பரிசீலனை செய்ய முடிவு செய்ததையொட்டி, இலங்கை அரசாங்கம் அதற்கான மசோதா ஒன்றைப் பார்லிமெண்டில் கொண்டுவந்தது.

இம்மூன்று ஆண்டுகளில் ஆயுள் தண்டனையே விதிக்கப்படுமாம் இந்த நடவடிக்கை பலன் தருமானால் மரண தண்டனை விதிப்பதுவது நிறுத்தப்படுமாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

13-5-56

மாநில மாநாட்டு விளம்பர நாள்

தி. மு. கழகத்தின் நகரக் கிளைகளும், சிற்றூர்—பேரூர்க் கிளைகளும் 13—5—56 ஞாயிற்றுக் கிழமையை மாநில மாநாட்டு விளம்பர நாளாகக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

கழகத் தோழர்கள் ஆங்காங்கு, நடந்தோ அல்லது சைக்கிளிலோ அணிவகுத்துச் சென்று, தெருத் தெருவாகச் சுற்றி, ஒலி எழுப்புக் குழாய்கள் (Megaphone) மூலமும், ஒலி பெருக்கி வாயிலாகவும், திருச்சியில் மே 17, 18, 19, 20 ஆகிய நான்குநாட்களில் மாநில மாநாடு நடைபெறப்போவது பற்றியும், அதன் சிறப்பியல்புகள் குறித்தும், விளம்பர முழக்கம் செய்யும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அணிவகுத்துச் செல்லும்போது விளம்பரத் தட்டிகள் ஏந்திக் கொண்டு, இலட்சிய முழக்கமிட வேண்டும். ஆங்காங்கு குறிப்பிட்ட இடங்களில் நின்று மாநில மாநாடு பற்றிய விளம்பர முழக்கம் செய்யவேண்டும்.

எல்லா கிளைக் கழகச் செயலாளர்களும் மேற்கண்ட முறைகளில் முயற்சி எடுக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. கழகத் தலைமை நிலையம்.

★★★★★★★★★★★★-★★★★-★★★★★★★★★★-★★★★★★★★★★-★★

எலிகளின் 'உண்டாட்டுக் காதை'!

மது வெறியில் மூழ்கிய எலிகள்!

20 திராட்சை இரச புட்டிகள் காலியான விந்தை!

கவுதா மே 4—

மதுவிலக்கு சோதனையில் கிடைத்த 20 திராட்சை இரசப் புட்டிகள் அரசாங்கப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் வழக்கு விசாரணையின் போது அப்புட்டிகள் அனைத்தும் காலியாகக் கிடந்தன.

அதிலுள்ள திராட்சை மதுவை எலிகள் அருந்திவிட்டதாக, அரசாங்க வழக்கறிஞர் சமாதானம் கூறினார்.

தனது சமாதானத்திற்குச் சான்றாக செத்துக்கிடந்த எலியுடன் கூடிய திராட்சை இரச புட்டி ஒன்று மன்றத்தில் காட்டப்பட்டது.

இதைக் கண்ட கட்சிக்காரரின் வழக்கறிஞர், 'கெட்டியாக மூடப்பட்ட இரசபுட்டியின் மூடியைத் திறந்து, இரசத்தைக் குடிக்க ஒரு எலியினால் முடியுமா?' என்ற கேள்வியைக் கேட்டார்.

அக்கேள்விக்கு பதில் தரும் முறையில்தான் செத்த எலியுடன் கூடிய காலியாக இருந்த புட்டி மன்றத்தில் காட்டப்பட்டது.

இந்த அருமையான சம்பவம் பீகார் சர்க்கார் மதுவிலக்கு அதிகாரிகளின் முன்னிலையில் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது!

நம் நாடு
சென்னை 5—5—'56 சனி

தட்சிணப் பிரதேச அமைப்பு!

மொழியை அடிப்படையாகக்கொண்டு மாகாணங்களை சீர்திருத்தி அமைக்கவேண்டும் என்ற கருத்து காங்கிரஸ் கட்சியின் ஆக்கமேயாகும். அக் கருத்து செயல்படுத்தப்படும் பட்சத்தில் இந்தியாவின் ஒற்றுமை சீர்குலைந்துவிடும் என்பதும் காங்கிரஸ் கட்சியின் அச்சமாகும்.

மொழிவழியில் மாகாணங்களைப் பிரித்து அமைக்கும் முயற்சியில், இந்தியாவின் ஒற்றுமை சிதைந்துவிடக்கூடும் எனக் காங்கிரஸ் கட்சி எண்ணுகிறது; அல்லது திடமாக நமபுகிறது. எனவே, இந்தியாவின் ஐக்கியத்துக்கு ஊறு தேடக்கூடிய அம்முயற்சியை கைவிட்டுவிட தாம் முனைந்துவிட்டதாகக் காங்கிரஸ் கட்சி சமாதானம் கூறுகிறது.

மொழிவழியில் மாகாணங்களைத் திருத்தி அமைப்பது ஒன்றே இந்தியாவின் ஒற்றுமையை ஒழித்துவிடும் எனக் காங்கிரஸ் அஞ்சுவது உண்மையானல், இந்தியாவின் ஒற்றுமை எத்தகைய பலக்குறைவான அஸ்திவாரத்தின் மீது எழுப்பபப்பட்டிருக்கிறது அல்லது அஸ்திவாரமில்லாதே கட்டப்பட்டிருக்கிறது என்ற உண்மையையும் காங்கிரஸ் ஒப்புக் கொண்டாக வேண்டும். அவ்வுண்மையைக் காங்கிரஸ் ஒப்புக் கொள்ளாது. அது ஒப்புக் கொள்ளவில்லை என்பதற்காக இந்தியாவின் அஸ்திவாரமின்மை அல்லது பலத் தாழ்வான அஸ்திவாரத்தின் தன்மை ஒருக்காலும் மறைந்துவிடாது.

இந்தியாவின் ஒற்றுமை இயற்கையாக அமைந்திருக்கவில்லை. அமைந்திருக்கும் அரசியல் ஒற்றுமையும் ஆங்கில ஆட்சிக் காலத்தில் வலுவில் திணிக்கப்பட்டிருப்பதாகும். ஆங்கில ஆட்சியிடத்திலிருந்து நேரடியாக அதிகாரத்தைத் தானமாகப் பெற்ற காங்கிரஸ், அதைக் கட்டிக்காக்க முயற்சிக்கிறது. இதுதான் இந்திய அரசியல் ஒற்றுமை வரலாற்றின் கதை. எனவே, மொழிவழி அமைப்பால் இந்தியாவின் ஒற்றுமை சரிந்தொழிந்துவிடுமோ என்ற அச்சத்திற்குக் காங்கிரஸ் பலியாகி இருக்கிறது.

அஸ்திவாரமற்ற இந்தியாவின் ஒற்றுமையை ஒற்றை ஆட்சி முறை மூலம் உருவாக்கி உறுதியுடையதாகச் செய்துவிடலாம் என்பது காங்கிரசின் நம்பிக்கையாக இருந்துவருகிறது. அதன் விளைவாக, காங்கிரஸ் பன்மொழி மாகாண அமைப்பை வரவேற்கிறது; அவ்வேற்பாட்டிற்கு அடிகோலுகிறது.

மக்கள் அரசியல் அறிவு பெறுவதையோ, நாட்டு நிர்வாகத்தில் சாதாரண மக்களும் நேரடியாகப் பங்கு பெறுவதையோ காங்கிரஸ் இப்பொழுது விரும்பவில்லை. மக்களின் நலத்தை, இருந்து தீரவேண்டிய இயல்பான உரிமையை, மக்களாட்சி முறையின் தனிப் பண்பை, இந்தியாவின் ஒற்றுமை என்ற பலிபீடத்தில் பலியிடத் துணிகிறது காங்கிரஸ். காங்கிரசின் இன்றைய செயல் முறை, காங்கிரசிற்கு ஏற்பட்டுள்ள மனப்போக்கின் மாற்றத்தை படம் பிடித்துக் காட்டுகிறது.

காங்கிரஸ் கட்சியின் போக்குப்படியே, பன்மொழி மாகாணங்கள் அமைக்கப்படுவதினலாவது, துளியும் சாத்தியமற்ற இந்திய ஒற்றுமையை உறுதிப்பாடு உடையதாக ஆக்கமுடியுமா என்பது சிந்திக்கத்தக்கது. அதன் சாத்தியக் கூறுகளை காங்கிரஸ் கட்சி இதுவரை சிந்தித்திருப்பதாகத் தெரியவில்லை. அதுபற்றி சிந்திக்க வேண்டும் என்ற முடிவையாவது காங்கிரஸ் கட்சி நியாயமானது என ஒப்புமா என்பதும் ஐயத்திற்குரியதாகும்.

பன்மொழி மாகாண அமைப்புகளாகத்தான் இந்தியத் துணைக்கண்டத்து மாகாணங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டு, ஆங்கில துரைத்தனத்தால் ஆளப்பட்டு வந்தன. அப்படி ஆளப்பட்டு வந்திருந்தும்கூட, பன்மொழி மாகாண அமைப்பில் வாழ்ந்த மக்களிடம் தம் தம் மொழிப் பற்று நசித்து விடவில்லை. அதற்குப் பதிலாக குறிப்பிட்ட ஒரே பன்மொழி மாகாணப்பற்று அரும்பி விடவில்லை. என்றும்போல் தனித்து ஆட்சி நடத்த வேண்டும் என்ற நினைப்புத்தான், பன்மொழி மாகாண அமைப்பில் ஒன்றுபட்டு இருந்த ஒவ்வொரு மொழி மக்களிடத்தில் இருந்து வந்தது.

அந்தத் தன்னாட்சிவிருப்பை, காங்கிரஸ் கட்சி மொழி அடிப்படையில் மாகாணங்களைத் திருத்தி அமைத்தல் என்ற கோட்பாட்டை வற்புறுத்துவதின் மூலம் தீவிரமாக்கிவிட்டது. இன்று, அதே காங்கிரஸ் கட்சி, அக்கோட்பாட்டில் இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்கும் அபாயம் இருப்பதாகக் கூறுகிறது. அதைக்கண்டு குலை நடுக்கமும் கொள்ளுகிறது.

இந்தியாவின் ஒற்றுமையைக் காட்டிக் காப்பதற்காகவே, பன்மொழி மாகாண அமைப்புத் தேவைப்படுகிறது எனக் காங்கிரஸ் மேலிடம் கூறுகிறது. ஆனல், குட்டி காங்கிரஸ் தலைவர்களோ, வெவ்வேறு மொழி பேசப்படும் இரண்டு அல்லது மூன்று மாகாணங்களின் இணைப்பால், அம்மாகாணங்களுக்கிடை பொதுவாக உள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைக் கூட்டாக மேற்கொள்வது இலகுவாகும் எனப் பேசித் திரிகின்றனர். இதையே சிற்சிலத் தொடர்பில், காங்கிரஸ் மேலிடத்தவர்களும் ஒரோர் சந்தர்ப்பத்தில் உரைத்திடவும் செய்கின்றனர்.

தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்துக்கு ஆள்திரட்டும் பொறுப்பை, தாங்களாக வலிய ஏற்றுக் கொண்டுள்ள இரண்டொருவர், மேலே எடுத்துக் காட்டியபடிதான் பிதற்றி வருகின்றனர். தட்சிணப்பிரதேசம் உருவாகிவிடுமானல், இந்தியத் துணைக் கண்டத்தின் தென் பகுதியில் வளம் தாண்டவமாடும் எனக் கூக்குரல் கிளப்புகின்றனர் அந்த குணாளர்கள். வீணாக அரபிக் கடலில் கலந்துவிடும கேரளத்துத் தண்ணீரை சென்னை பயன்படுத்துவது தட்சிணப்பிரதேச அமைப்பு ஒன்றினல்தான் சாத்தியமாகும் எனவும், தங்கள் கட்சிக்கு ஆதாரம் காட்டி வாதிடுகின்றனர் அந்தத் திருவாளர்கள்!

இன்றுள்ள ஆட்சி அமைப்பில் மாகாணங்கள் அனைத்தையும் அடக்கி ஆளும் சர்வாதிகாரம் கொண்டு விளங்குவது இந்தியப் பேரரசாகும். அதன் ஆணையை மீறி எந்த மாகாண ஆட்சியும் செயல்பட முடியாது.

அரபிக் கடலில் வீணாகக் கலந்துவிடும் நீரை தமிழ் நாட்டின் நலத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கவேண்டும் என இந்தியப் பேரரசு ஒரு கட்டளைப் பிறப்பிப்பதற்கு எவரும் தடையாக இருக்கவில்லை. அவ்வாறு பிறப்பிக்கப்படும் கட்டளைக்கு கேரளம் இணங்காமல் இருப்பதற்கும் நியாயமில்லை. கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க மறுப்பதற்கும் கேரளத்திற்கு அதிகாரமில்லை.

இந்தியப் பேரரசு அமைப்பில் சென்னையும் கேரளமும் இரு உறுப்புகளாக இருந்தும் கூட, கேரளத்தின் வளத்திற்குப் பாதகமேற்படாத வகையில், சென்னையின் வளத்துக்கு ஏற்பாடு செய்வதில், இந்தியப் பேரரசு தயக்கங் காட்டுவது எதற்காக என்ற கேள்வி எழுவதற்கு இடமுண்டு. அக்கறை இல்லாது இருப்பதேன் எனக் கடாவுவதற்கும் நியாயமுண்டு.

சென்னையின் எதிர்கால நலத்தைக் கருதி, கேரளத்தை இணங்கச் செய்ய முன்வராத ஒரு ஆட்சி அமைப்பில் அதாவது இந்தியப் பேரரசில் சென்னை ஏன் ஒரு உறுப்பாக இருக்க வேண்டும் என்ற நியாயமான வினவிற்கும்விடை கூறி ஆக வேண்டும். அதுவுமின்றி சென்னையின் வளத்தில் அக்கறை கொள்ளாத கேரளம் இணைந்துள்ள ஒரு உறுப்பில் அதாவது இந்தியப் பேரரசு ஏற்பாட்டில் ஒரு உறுப்பாக சென்னையும் இடம் பெற்று இருப்பது சென்னையன் தன்மானத்திற்கு இழுக்கல்லவா எனக் கிளம்பும் வினவிற்கும் விடை கண்டாக வேண்டும்.

எனவே, தட்சிணப்பிரதேச அமைப்பு முயற்சி, அதன் ஆதரவாளர்கள் கூறுவதுபோல் சென்னையின் வளத்தைப் பெருக்குவதற்காகவோ அல்லது நலத்தைக் கூட்டுவதற்காகவோ அல்ல என்பது விளக்கமாகிவிட்டது. இந்திய ஒற்றுமைக் காப்புக்காகவோ அல்லது இந்திய ஒற்றுமைக் குலைவைத் தடுப்பதற்காகவோ அல்லது வேறு எதற்காகவோ நேரு பெருமான் தட்சிணப் பிரதேச அமைப்பை ஆதரிக்கிருர்; எனவே தாமும் அதை ஆதரிப்பதின் மூலம் எதிர்காலத்தில் சொந்த இலாபத்திற்கு வழி செய்து கொள்ளலாம் என்றக் கருத்தில்தான் சென்னை ஆதரவாளர்களில் இரண்டொருவர் அதை ஆதரித்து வருகிருர்கள். இந்த ஒன்றைத் தவிர வேறு நியாயமான காரணத்தை அவர்கள் ஆதரவிற்கு நம்மால் குறிப்பிட முடியவில்லை.

பஞ்சாப் காங்கிரசில் மீண்டும் வெடிப்பு!

மாநிலப் புது அமைப்புத் திட்ட எதிரொலி

காங்கிரசார் மத வெறியருடன் கூடிக் குலவுகின்றனராம்

சந்திகர், மே. 3—

பஞ்சாப் மாநிலத்தின் எதிர்கால அமைப்பு குறித்த புதுஅமைப்புத் திட்டத்திற்கு, பஞ்சாபில் இந்துமத வெறியர்கள் எதிர்ப்புக் காட்டி வருகின்றனர். என்ற செய்திகள் வந்தன.

ஆனல் இப்போது, இந்த எதிர்ப்புக்குப் பின்னல், காங்கிரசார் மறைந்து நின்று கோண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

எதிர்ப்பு இயக்கத்தின் தலைமை நிலையம் ஜலந்தரில் இருப்பதாகவும், அங்கு பஞ்சாபின் பிரபல செல்வாக்கு மிகுந்த காங்கிரஸ் தலைவர் ஒருவரின் தலைமையில்தான் இந்த எதிர்ப்பு இயக்கம் நடத்தப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

மாநில புதுஅமைப்புத் திட்டம் பஞ்சாபைப் பொறுத்து, சீக்கியர்களுக்குச் சாதகமானதாய் அமைந்திருப்பதாகக் கூறி, வெளிப்படையாகவே இந்துமத வெறியர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களைத் தூண்டிவிட்டு இயக்குபவர்களாக, பிரபல காங்கிரசார் இருப்பது, பஞ்சாப் சர்க்காருக்குக் கவலையைத் தந்திருக்கிறதாம்!

இப்போது டில்லி சென்றிருக்கும் முதன்மந்திரி பிரதாப் சிங் கெய்ரான், டில்லிக்கு நிலைகளை விளக்கி, காங்கிரஸ் செயற்குழுவின் அனுமதி பெற்று, கட்சிக் கட்டுப்பாட்டை மீறி கிளர்ச்சியிலீடுபடும் காங்கிரசார்மீது நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிய வருகிறது.

மாநில சட்டசபையில் பஞ்சாப் பற்றிய மாநில புதுஅமைப்பு மசோதா விவாதிக்கப்பட்டபோது, எந்த ஒரு காங்கிரசாரும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும், இப்போது விவாதம் முடிவுற்ற பிறகு, திட்டத்திற்கு எதிரான இயக்கத்துடன் சேர்ந்து கொண்டு கிளர்ச்சியிலீடுபடுவது, நிச்சயம் காங்கிரசின் கட்டுப்பாட்டை மீறுவதாகும் என்றும் சர்க்கார் கருதுகிறதாம்.

'பம்பாய் துப்பாக்கிப் பிரயோகம் அநியாயமானது'

'போதுமான முகாந்திரங்கள் இருக்கவில்லை'

பம்பாய் நீதிமன்றக் கருத்து

பம்பாய், மே 3—

"பம்பாய் நகரில் கடந்த நவம்பர் 21-ந் தேதியன்று சம்யுக்த மராட்டியம் கோரி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மராட்டிய வீரர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, அவர்களில் 12 பேர்களின் உயிரைக் குடித்தது நியாயமானதல்ல; அநியாயமானது."

என்று, பம்பாய் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

மாநில புது அமைப்பு மசோதா பம்பாய் மேல் (சட்ட)சபையில் விவாதிக்கப்படும்போது, ஆர்ப்பாட்டக்காரர்கள், மராட்டிய மாநிலக் கோரிக்கைக்கான குரல் எழுப்பிய வண்ணம் ஊர்வலம் வந்தனர். சட்டசபைக் கட்டிடத்திற்கு அரை மைல் தூரத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்ட அந்த ஊர்வலக்காரர்கள்மீதுதான், போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

இது குறித்து விசாரித்தபோது, போலீசார் சார்பில், ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசியதாகவும், பஸ்களைக் கொளுத்தியதாகவும், அதனலேயே நிலை கட்டுக்கடங்காது போனதினலேயே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது என்று வாதிடப்பட்டது.

ஆனலும், ஊர்வலத்தார்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதற்குப் போதுமான முகாந்திரங்கள் இருந்ததாகத் தோன்றவில்லை என்று, ஜூரிகள் ஒருமனதாகக் கூறியிருக்கின்றனர்.

287 மணி நேரம்!

உயிரோடு பூமிக்குள் புதைந்து கிடந்தார்

பிரேஞ்சுப் பக்கிரியின் சாதனை

லில்லி (பிரான்ஸ்)—

287½ மணி நேரம் பூமிக்குள் புதைந்து கிடந்துவிட்டு, மீண்டும் உயிரோடு வெளிவந்திருக்கிருராம் இந்நாட்டுப் பக்கிரி ஒருவர்.

ய்வான்ய்வா என்ற 25 வயதான அவர், உலகத்திலேயே புதியதொரு 'ரிகார்டை' இந்தத் துறையில் நிலைநாட்டியிருக்கிருராம்.

வெள்ளைத் தலைப்பாகையும், வெறும் கோவணமும் மட்டும் அணிந்திருந்த அந்தப் பக்கிரி, இன்று அவரது தற்காலிகப் புதைகுழியிலிருந்து வெளிக் கொணரப்பட்டாராம்

வெளிவரும்போது அவர், மிகவும் பலவீனமான நிலையில் மூச்சுத்திணறி, சாகும் தருவாயிலிருந்தாயும், சிறிது எலுமிச்சம் பழ ரசமும், பழமும் உண்ணத் துவங்கியதும் அவர்,தன்னுணர்வு பெற்றதாயும் தெரியவருகிறது.

'இனி நான் ஒரு 'சைவ' உணவு உட்கொள்பவனகவே இருப்பேன்; ஏனெனில், கடந்த காலத்தில் நான் மாமிசம் உண்டு வந்தேன்; அது, நான் உலக 'ரிகார்ட்' நிறுவும்போது பெரும் கஷ்டத்தை எனக்குத் தந்துவிட்டது' என்று அவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிருர்.

'உயிரோடு பூமிக்குள் புதைந்து மீண்டும் உயிரோடு வெளிவரும் இந்த வித்தையில், முன்பு ஜெர்மனியைச் சேர்ந்த டார்ட்மண்ட் என்பார் நிறுவிய உலக ரிகார்டைவிட 37 மணிநேரம் அதிகமான 'ரிகார்டை' நான் நிறுவியிருக்கிறேன்,' என்றும் அவர் பத்திரிகையாளரிடம்கூறியிருக்கிருர்.

கடந்த ஏப்ரல் 29-ந் தேதியன்று, இந்தப் பிரெஞ்சுப் பக்கிரி ஒரு மரப்பெட்டிக்குள் அடைக்கப்பட்டார். அவருடன் இரண்டு போத்தல் எலுமிச்சம் பழரசமும், சிறிதுகுளிர்ந்த சர்க்கரை கலக்காத தேநீரும மட்டும் பெட்டிக்குள் வைக்கப்பட்டன; பின் அந்தப் பெட்டி, 120 அடி ஆழமான புதைகுழியில் புதைக்கப்பட்டதாம்.

தனது இந்த வித்தையைக் குறித்து சொற்பொழிவுகள் நிகழ்த்தத் திட்டமிட்டிருக்கும் இந்தப் பிரெஞ்சுப் பக்கிரிக்குத் திருமணமாகி, மூன்று குழந்தைகள் இருக்கின்றனவாம்!

கிராமங்களுக்கு இனி என்ன குறைவு?

சென்னை, மே. 3—

"கிராமப்புறங்களில் வாழ்வோருக்கு ஒன்றரை மைல் வட்டாரத்திற்குள் அஞ்சல் அலுவலகமும், ஏழெட்டு மைல் தொலைவிற்குள் தந்தி அலுவலகங்களும் 2-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏற்படுத்த வேண்டுமென்பது என்னுடைய விருப்பமாகும்"

என்று, மவுண்ட் ரோடில் சென்னை 'போஸ்ட்-மாஸ்டர் ஜெனரல்' அலுவலகப் புதுக் கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், மத்திய தபால் அமைச்சர் ஜெகஜீவன்ராம் குறிப்பிட்டுள்ளார்.



24—4—56-ல், போளுருக்குச் சமீபத்தில் உள்ள எழுவாம்பாடி கிராமத்தில், தி. மு. கழகச் சார்பில், பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், அண்ணு அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் எடுக்கப்பட்ட படம்

—படம் : 'மெட்ரூஸ் போட்டோ அவுஸ்', வேலூர்.

இதுமட்டும் நிச்சயம

சென்னை-ஆவடியில், டயர் ... பத்தித் தொழிற்சாலை ஒன் ... கிறுவதற்கு என்ன வசதிகள் ... சென்றன என்பது இப்பொழு ... பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

கனரகப் மின்சாரப் பொரு ... உற்பத்திச்சாலை ஆவடியில் ... படமாட்டாதென இப்பொ ... தெரிந்துவிட்டதால், டயர் உ ... த் தொழிற்சாலையாவது ... லாமென கருதப்படுவதாகத் ... கிறது.

இந்தியக் கப்பல்களில் 1954-55-ல் மொத்தம் 14,99,276 டன் சரக்குகள் ஏற்றிச் செல்லப்பட்டன; 1951-52-ல் மொத்தம் 86,92,272 டன் ஏற்றிச் செலப்பட்டன.

கக்கனுக்கு தேபர் எச்சரிக்கை

'கழகத்தைக் கைவிடுக'

'காங்கிரசிற்குள் அவர்கள் நுழைவதைத் தடுத்தே ஆகவேண்டும்'

புதுடில்லி, மே. 3—

"தமிழ் நாடு காங்கிரஸ் கட்சிக்குள் திராவிடர் கழகம் நுழைவதை என்ன பாடுபட்டேனும் தடுத்தே ஆகவேண்டும்"

என்று காங்கிரஸ் தலைவர் யூ என். தேபர், சென்னை காங்கிரஸ் தலைவர்களுக்கு எச்சரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

பிரதேசக் காங்கிரஸ் தலைவர்கள், செயலாளர்கள் மாநாட்டினைத் துவக்கிவைத்த தேபர், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கக்கனிடம், நீங்கள், கழகத்தைக் கைவிட்டுவிட வேண்டும்' என்று திட்டமாக—கண்டிப்பாக எச்சரித்ததாகக் கூறப்படுகிறது.

தோழர் கக்கன் பேசுகையில், இந்தியாவில் வேறெங்கிருப்பதையும்விட சென்னையில்தான், காங்கிரஸ் ஊழியர்களிடையே ஒற்றுமை மிகுந்திருப்பதாகக் கூறியதாகக் கூறப்படுகிறது.

மிளகாய் ஏற்றுமதி அனுமதி ரத்து

மிளகாய் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்ட 'கோட்டா' 1956 ஏப்ரல் 30-ந் தேதியுடன் முடிவடைந்துவிட்டது; தற்போதைக்கு மீண்டும் இது புதுப்பிக்கப்படக் கூடாதெனவும், ஏற்றுமதிக்கு அனுமதி அளிப்பதில்லை எனவும், இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

'திராவிட கழக நோக்கங்களை காமராசர் மந்திரி சபை ஆதரிக்கிறது'

'ஆகவே ஆதரிக்க வேண்டும்'

எலத்தூர் பொதுக்கூட்டத்தில் பெரியார் பேச்சு

சீர்காழி, மே. 3—

எலத்தூரில், கடந்த ஏப்ரல் 28-ந் தேதி திராவிடர் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினார்.

அப்போது அவர், திராவிடக் கழகத்தின் நோக்கங்களில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றி வரும் காமராசர் மந்திரி சபையை ஆதரிக்கவேண்டும் என்றும், கம்யூனிஸ்டுக் கட்சி வலையில் விழாமல், பொதுமக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்றும், சாதி மத பேதங்கள் ஒழியவேண்டும் என்றும் பொதுமக்களிடத்தில் கூறியிருக்கிறார்.

தஞ்சை மாவட்டத் திராவிட கழகத் தலைவர் ஆறுமுகம் தலைமை தாங்கினார்.

—'ச. மி.': 4-5-56

ரூ. 7 கோடி செலவில் பம்பாயில் அணு உலை

டிராம்பேயில் உருவாகும் நிலைபற்றி விளக்கம்

1955 ஏப்ரலில் கானடா, கொழும்புத் திட்டப் பிரகாரம் இந்தியாவுக்கு உச்ச சக்தி அணு ஆராய்ச்சி—பரிசோதனை உலையொன்றைத்தர முன்வந்தது; அந்த அன்பளிப்பை இந்தியா சிறிது காலத்துக்குப் பின் ஏற்க முன்வந்தது.

திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 7 கோடி மதிப்புள்ள அந்த அணுஉலை, பம்பாய்க்கருகிலுள்ள 'டிராம்பே'யில் இந்திய சர்க்காரின் அணுசக்தி நிறுவனத்தில் நிர்மாணிக்கப்படும். அதை வைப்பதற்கான கட்டடம் நீளஉருளைபோன்ற ஒரு கட்டடமாக இருக்கும். 135 அடி உயரமும், 120 அடி குறுக்களவுமுள்ள உருக்குக் கூண்டுதான் கட்டடமாக அமையும். அதுமுற்றிலும் மூடிப் பொருத்தப்பட்டிருக்கும் அந்த உருளைக் கட்டடத்தைச் சுற்றி துணைச் சாதனங்களுக்கும், பரிசோதனைச்சாலைகளுக்கும் வேண்டிய கட்டடங்கள் இருக்கும்.

ஆசிரியர்கள் கிளர்ச்சிக்கு சர்க்கார் பணிவு

கோரிக்கைகளை நிறைவேற்றித்தர உறுதிமொழி

மத்திய பாரத் மாநில ஆசிரியர்களின் வெற்றி

இந்தூர், மே. 3—

மத்திய பாரத் மாநில ஆசிரியர்கள், சம்பள உயர்வு கோரி நடத்திய கிளர்ச்சியில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

மாநில சர்க்கார், ஆசிரியர்களின் கோரிக்கைகள் பலவற்றை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

மாநில ஆசிரியர் சங்கம் விடுத்திருந்த வேண்டுகோளின்படி கடந்த ஏப்ரல் 26-ந்தேதியன்று, ஆசிரியர்கள் 15 நிமிடங்களுக்கு உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர்.

'சுந்தரராமன் சம்பளக் கமிஷன்' சிபாரிசுகளை அமுல் செய்யுமாறு ஆசிரியர்கள் கோரினர்; இந்தச் சிபாரிசுகள் மூலம் சுமார் 30 ஆயிரம் ஆசிரியர்கள் பயனடைவர் என்று கூறப்படுகிறது.

டில்லி சர்க்காரும், ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துமாறு மத்திய பாரத் மாநில சர்க்காருக்கு உத்தரவிட்டிருந்தார்களாம்.

இத்தனைக்கும் பிறகு சர்க்கார் இறங்கி வந்து, 'சுந்தரராமன் சம்பளக் கமிஷன்' சிபாரிசுகளை அமுல் செய்ய வேண்டுமென்பதைத் தவிர, இதர கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எழுத்து மூலம் உறுதிமொழி தந்திருக்கின்றனர்.

அதன் பேரில் ஆசிரியர் சங்கத்தவர் தொடர்ந்து கிளர்ச்சியில் ஈடுபடுவதில்லை என்றும், சர்க்காருக்கு எதிராக நடத்திவந்த ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திவிடுவதெனவும், நல்லுறவு பிறப்பதற்காக போராட்ட செயற்குழுவைக் கலைத்துவிடுவதெனவும் முடிவு செய்திருக்கின்றனராம்.

அமுல் செய்யப்படுமா?

சென்னை, மே. 3—

சென்னை மாநில திரைப்படத் 'தியேட்டர்'களில் பீடி, சிகரெட் புகைப்பதை முழுமையிலும், தடை செய்துவிடவும், பேசும் படத் திரையீடு சட்டத்தில் தக்க திருத்தங்களைக் கொண்டு வரவும் சர்க்கார் முயன்றுவருகிறது.

மாதர் சேமிப்பு இயக்கத்தையும், சிறு சேமிப்பு இயக்கத்தையும் வளர்ப்பதற்காக, இதுவரையில் மொத்தம் 161 நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; அவைகளில் சுமார் 600 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அப்ரகச் சுரங்கத் தொழில்

தனிப்பட்ட முதலாளிகள் நடத்த முடியாது

நாகபுரி, மே. 3—

இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த அப்ரகத்தில் மத்திய பிரதேசம் மட்டும் 70 சதவிகிதம் உற்பத்தி செய்வதாகவும், சுமார் 120 மைல் நீளப் பரப்பில் அப்ரகம் இருப்பதாகவும், இவை சுமார் 400 பங்குதாரர்களால் இப்போது தோண்டி எடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

புதிய தொழில் கொள்கையை இந்தியப் பிரதமர் நேரு அறிவித்ததையொட்டி, மத்திய பிரதேச சர்க்கார் இனி எவருக்கும் புதிதாக அப்ரகச் சுரங்கங்களை குத்தகைக்கு விடாது என்று தெரியவருகிறது.

இதுகுறித்து மாநில சர்க்கார் திட்டமான முடிவு மேற்கொண்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

மாநில சர்க்கார் நிர்வகிக்கக் கூடிய தொழில்களில் முதன்மையானவற்றுள் ஒன்ருக இந்த அப்ரகச் சுரங்கத் தொழில், புதிய தொழிற் கொள்கைப்படி கருதப்படுகிறதாம்.

ரூ. 50-இலட்சம் செலவில்!

கேரளத்தில், ரூ. 50-இலட்சம் செலவில், ஆயுர்வேத மருத்துவ முறையை அபிவிருத்தி செய்வதற்கான ஆராய்ச்சிக் கழகம் நிறுவப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம் : அறிக்கை—7/56

பொதுத் தேர்தல் குறித்து வாக்கெடுப்பு

பொதுத்தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கோண்டு போட்டியிட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து, மாநில மாநாட்டிற்கு வருகை தருவோரின் பொதுவான கருத்தை அறியும் வாக்கெடுப்பு முறை, 19—5—56 சனியன்று காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிக்குள் நடைபெறும். நுழைவுச் சீட்டு உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்குரிமைச் சீட்டு தரப்படும்.

தி. மு. கழகம்
பொதுத் தேர்தலில் போட்டியிட

வேண்டும்	
வேண்டாம்	

இப்படி அமையும் சீட்டில் அவரவர் விருப்பத்திற்கிணங்க எதிரிலுள்ள கட்டத்தில் X அடையாளம் இட வேண்டும்.

மாநாட்டுப் பந்தலில் தனியே வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் வாக்குரிமைச் சீட்டைப் போட வேண்டும்.

'அறிவகம்,'
சென்னை—13
2-5-1956

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திருவள்ளுவர் திருநாள்

மாணவர் மன்ற வேண்டுகோள்

" திருக்குறளை இயற்றித் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வினை உலகு உணரச் செய்த வள்ளுவர் நாள் 24—5—56-ல் வருகின்றது.

" தமிழருக்குத் தலைநிமிர்ந்த வாழ்வினை அளித்த அப்பெரியாரின் பொன்னுளைச் சிறப்புடன் கொண்டாடுவது, தமிழ் மக்களின் உயர்வுக்கு அடிப்படையாகும்.

" அந்நாளில், தக்க பெரியோர்களைக் கொண்டு திருக்குறள் சொற்பொழிவாற்றச் செய்யலாம்; செல்வமுடையவர்கள், திருக்குறள் அச்சிட்டு இலவசமாக வழங்கலாம்.

"மாணவர் மன்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் வட்டங்களில் வள்ளுவர் விழாக் கொண்டாட வேண்டியதின் இன்றியமையாமையை விளக்கிக் கொண்டாடச் செய்ய வேண்டுகிறோம்."

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மாநில மாநாடு

பிரதிநிதிகள் தேர்வு குறித்து விளக்கம்

★

மாவட்டக் கழகங்கள் :

எல்லா மாவட்டக் கிளைகளின் உறுப்பினர்களும் மாநாட்டுப் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்ளும் உரிமையுடையவர்களாவர்.

கிளைக் கழகங்கள் :

ஒவ்வொரு கிளையின் செயலாளரும், மற்றொரு பிரதிநிதியும் கிளைக்கழகச் சார்பில் மாநாட்டுப் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்ளும் உரிமை பெறுகின்றனர். செயலாளரே மாவட்ட உறுப்பினராயிருந்தால் அதற்காக வேறு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பதைக் கழகத் தோழர்கள் கவனிக்க வேண்டுகிறோம்.

—தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

[damaged]யரும் அரிசி விலை குறைந்துவிடுமா?

[damaged]0,000 டன் அரிசி மூலம் சர்க்கார் நடவடிக்கை

சென்னை, மே 4—

"இந்தியப் பேரரசின் அரிசி [damaged]ஸ்டிப்பிலிருந்து 10,000 டன் [damaged]சி, பட்டணம் படி ரூ 0-11-6-[damaged] சென்னை நகரில் சில நாட்[damaged]ளுக்குள் விற்கப்படுமாம்.

'சந்தர்ப்பம் நேரிட்டால் இந்திய [damaged]ர்க்கார் இதைவிட அதிகம் அரிசியை சேமிப்பிலிருந்து தருவதற்கும் தயாராக இருக்கிறதாம்.

இதுபற்றி தெரிவித்த நிதி அமைச்சர், சென்னை நகரம் முழுமையிலும் டி. யூ சி. எஸ். எல்லாக் கிளைகள் மூலம அரிசி வினியோகிப்பதே அரசியலாரின் எண்ணமென்றும், வெளியூர்களில் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி சர்க்கார் பின்னர் தீர்மானிக்குமென்றும், அவசியம் என்ற நிலைமை ஏற்பட்டால் சென்னை நகரைப் போலவே முக்கியமான நகரங்களில், சர்க்கார் இதுபோன்ற ஏற்பாடுகள் செய்யுமென்றும் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கைகளினால் பகிரங்க 'மார்க்கெட்'டில் அரிசி விலையேற்றம் நிற்கும் என்றும், மற்ற உணவுப் பொருட்களின் விலைவாசிகளை அனுசரித்து பொது விலைவாசியும் குறையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

4,5,6 படிவங்களுக்கு முழுச் சம்பள சலுகை

ஜூன் முதல் அமுலாகுமாம்

சென்னை, மே 4—

தற்போது 4,5,6 படிவங்களில் அரைச் சம்பளத் தொகை வசூலிக்கப்படும் கிராமாதிகாரிகள், போலீஸ்காரர்கள், தலைமைகான்ஸ்டபிள்கள், ஆரம்ப ஆசிரியர்கள் கடைநிலை சர்க்கார் ஊழியர்கள் ஆகியோரின் பிள்ளைகளுக்கு இனி சம்பளமே வசூலிக்கப்பட மாட்டாதென்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

இம்முழுச் சம்பளச் சலுகை ஜூன் திங்களில் பள்ளி திறந்ததும் அமுலுக்கு வருமாம்.

இத்திங்கள் இறுதியிலாவது, ஜூன் துவக்கத்திலாவது ஐ நா. பாதுகாப்புக் கவுன்சிலில் காஷ்மீர் தாவாவை பாகிஸ்தான் அரசினர் கொண்டுவரத்தீர்மானித்திருக்கிறார்களாம்.

மனைவி இருக்க...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

எனக் கண்டிப்பாக பதிலுக்கு எச்சரித்துவிட்டார்!

ஆனால், மாதர் சங்கமோ, மேற்கொண்ட முயற்சியை விட்டுவிடாமல், ஆலை அதிபரை மணக்க ஒப்பியுள்ள கல்விகற்றப் பெண்ணிடம் ஒரு தூதுக் குழுவை அனுப்பியது. அப்பெண்ணிடம், முதல் மனைவியின் சார்பில், தூதுக் குழு வாதிட்டது!

மற்றொருத்தியை மணந்து கொள்ள வேண்டாம் என ஆலை அதிபரைக் கேட்டுக் கொண்ட தூதுக்குழு, முதல் மனைவிக்கு இரண்டாண்டுக் காலத்துக்குள்ளாகக் கல்வி கற்றுக் கொடுத்து வருவதாகக் கூட வாக்களித்ததாம். இருந்தாலும், அவர் பிடிவாதமாக விரும்பியவளை மணக்கத்தான் செய்வேன் எனக் கூறிவிட்டாராம்!

ஆனால், ஆலைஅதிபரை மணந்து கொள்ள ஒப்பிய அழகிக்கோ தூதுக்குழுவினா கோரிக்கைக்குப் பிறகு, அவரை மணந்து கொள்ளுவதில் இருந்த உற்சாகம் மங்கிப் போய்விட்டதாம்!

தங்கள் முயற்சி தோற்றுவிடுமானால், அதன் பிறகு, இம்மண விவகாரத்தில் சம்மந்தப்பட்டுள்ள கதாநாயகனையும், கதாநாயகியையும் அம்பலப்படுத்துவதாக, மாதர் சங்கச் சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது!

மனிதப் பண்பாட்டின் அடிப்படைத் தத்துவம்

பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி மத்திய அமைச்சர்

புதுடில்லி, மே 4—

"தனியார் துறை எப்பொழுதும் இருந்தே வரும். குடியரசு சமுதாயத்தில் இதை நாம் ஒழித்துவிட முடியாது; அதற்கு ஊக்கமளிக்க வேண்டியதுதான் சரியானதாகும். சர்க்கார் துறையைப் பொறுத்தமட்டில் மனிதப் பண்பாடுகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஒரு அடிப்படைத் தத்துவம் இருக்கிறது," என்று, மத்திய அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார், தொழிலதிபர்கள் நிறுவனத்தின் 23-வது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தொழிலில் தனியார் துறை பாதுகாப்பானது நல்ல அல்லது கெட்ட அமைச்சர்களைப் பொறுத்தது அல்ல என்றும், மகிழ்வுடனும், திருப்தியுடனும் தொழிலாளர்களை வைத்திருப்பதையே பொறுத்தது என்றும், அவர்களின் எதிர்காலத்தை வரையறுப்பது அவர்கள் வசமே இருப்பதாகவும், இதை நல்நோக்குடன் செலுத்தினால் பெரும்பான்மையான மக்கள் அவர்களை ஆதரிப்பார்களென்றும் அவர் கூறினார்.

ஒரு கண் பழுதுடையோர்

இரயில்வே உத்தியோகத்திற்கு தேர்வு பெறலாம்.

கோரக்பூர், மே 3—

இந்திய இரயில்வேக்களில் 'கெஜட்' பதிவில்லாத குமாஸ்தா உத்தியோகங்களுக்கு, இனி, ஒரு கண் குருடாயிருப்பவர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர். இதுகாறும் அது கூடாது என்றிருந்த தடை நீக்கப்பட்டிருக்கிறதாம்.

'இரயில்வே நிர்வாகம் இந்த முடிவை மேற்கொண்டிருக்கும் போதே, தேர்ந்தெடுக்கும் அதிகாரிகள், ஒரு கண் குருடாயிருப்போருக்குக் காலப்போக்கில் மறு கண்ணும் பழுதுபட்டுப்போகும் வாய்ப்பிருக்கவில்லையா என்பதையும் ஆராய வேண்டும்' என்று உத்தரவும் பிறப்பித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

காத்திருந்தவன்!

பாளூர், மே. 3—

"காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு சென்றான்,' என்று கதை சொல்லுவார்கள்; அது உண்மையோ, பொய்யோ, அதுபோன்ற சம்பவம் ஒன்று இங்கு நடந்திருக்கிறது.

மணம் நிச்சயித்தார்கள்; ஆனால் மணவிழா நேரத்திற்குக் குறிப்பிட்டபடி, நிச்சயித்த மாப்பிள்ளை, மணமகள் வீட்டிற்கு வரவில்லை; உடனே மணவிழா காணவந்திருந்த ஒரு இளைஞருக்கு 'யோகம்' அடித்தது; மணமகன் ஆனான்; மணந்தான் மங்கையை; அவளை அழைத்துக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டுவிட்டான்.

அதன்பின், நிச்சயித்திருந்த மாப்பிள்ளை வந்தான்; பாவம்! 'காத்திருந்தவன் கதை'தான் அவனுக்காகக் காத்திருந்தது!

ரூ. 8 கோடி செலவில்!

கன்னியாகுமரி — காசி வரையில் தேசியப் பாதை அமைக்கப்படும்

புதுடில்லி, மே. 1—

1,519 மைல் நீளம் கொண்டதும், 8 மாநிலங்களின் வழியாகச் செல்லுவதும் காசி முதல் கன்னியா குமரிவரை போடப்படுவதுமான 'தேசியப் பாதை'க்கு ரூ. 6 கோடி செலவிட தீர்மானிக்கப்பட்டிருக்கிறதெனத் தெரிகிறது.

இப்பாதைச் சாலை, ஏற்கனவே அமைக்கப்பட்டு உபயோகத்திலுள்ளது; இதனை 'தேசியச் சாலை' யாக்குவதற்குச் சில பாலங்களை அமைப்பதும், பழுது பார்ப்பதும் அவசியமாம்.

****

தி. மு. க. பொதுக்குழு

16—5—56-ல் திருச்சியில் நடைபெறும்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம், மாநில மாநாடு நடைபெறும் பந்தலில் அமைந்துள்ள 'பொதுக்குழு விடுதி'யில் 16—5—56 புதன்கிழமை காலை 10 மணி யளவில் நடைபெறும்.

—தலைமை நிலையம்

****

தி. மு. க.—மாநில மாணவர் கிளை

அமைப்புக் குழுக் கூட்டம்

"தி. மு. க.-மாநில மாணவர் கிளை அமைப்புக் குழுக் கூட்டம் 16-5-56 புதன்கிழமை மாலை 6 மணியளவில் திருச்சி மாநாட்டு பந்தலில் நடைபெறவிருக்கின்றது. அமைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகிறேன்"

என்று, தி. மு. க.—மாநில மாணவர் கிளை அமைப்பாளர் டி. கே. பொன்னுவேலு அறிவிக்கிறார்.

மதுவிலக்கு தீவிர அமுல்

இரண்டு திங்களில் 1,057 பேர் கைது

திருநெல்வேலி, மே 2—

கடந்த பிப்ரவரி, மார்ச் ஆகிய இரு திங்களில் மட்டும் நெல்லை மாவட்டத்தில் 1055 மதுவிலக்குக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன; 1,057 பேர் கைதாயினர்; 1,007 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது; 770 பேர் தண்டிக்கப்பட்டனர்—என்ற தகவலை, மாவட்ட போலீஸ் அதிகாரி, மதுவிலக்கு ஆலோசனைக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தந்திருக்கிறார்.

கூட்டத்தில், 'இப்போது மூன்று நான்கு மாவட்டங்களுக்குச் சேர்த்து, ஒரு பிரச்சார வண்டி தரப்படுவது போதுமானதல்ல' என்று பேசப்பட்டிருக்கிறது.

ரூ.78 இலட்சம் நஷ்டமாம்

புதுடில்லி, மே 3—

பெருமழையினாலும், கடும்வெள்ளப் பெருக்கினாலும் இந்திய இரயில்வேகளுக்கு 1955 ஜூலை 1-ந்தேதி முதல் மொத்தம் ரூ 78 இலட்சம் நஷ்டம் என்றும், இவற்றில் சென்னை மாநிலத்தில் ஏற்பட்ட புயலில் தென்னிந்திய இரயில்வே நஷ்டமும் சேர்ந்ததென்றும் துணை இரயில்வே அமைச்சர் ஓ. வி. அழகேசன் மக்கள் சபையில கூறினார்.

தொழில் நுணுக்கக் கல்விக் கழகம்

சென்னையில் நிறுவப்படும்?

சென்னை, மே 4—

தென்பகுதியில் இந்தியப் பேரரசு துவக்கப்போகும் உயர்தர தொழில் நுணுக்கக் கல்விக் கழகம் சென்னையில நிர்மாணிக்கப்படும் என்று தென்பிராந்திய தொழில் நுணுக்கக் கல்விக் குழு ஒரு மனதாகத் தீர்மானித்திருக்கிறது.

தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவு உயர்வு

சென்னை. மே. 3—

ஏப்ரல் திங்கள் 21-ந் தேதியுடன் முடிவுற்ற வாரத்தில், சென்னை நகரில தொழிலாளர்கள் வாழ்க்கைச் செலவு புள்ளி 354 ஆக உயர்ந்தது. முன்னைய வாரத்தைவிட இது 2 புள்ளி அதிகம். இவ்வுயர்வுக்கு அரிசி, நெய் விலைகள் அதிகரித்ததே காரணமாம்.

மே விழா பொதுக்கூட்டம்

6—5—56 மாலை 6-மணியளவில் சென்னை 46-வதுவட்ட தி. மு. கழகச் சார்பில், எண் 142, ஆன் வார்பேட்டை கழகப் பணிமனை முன்பு மேவிழாப் பொதுக்கூட்டம் தோழர் கை. பிரமையா தலைமையில் நடைபெறும். தோழர்கள் மா. மோகன், சைதை—சம்பந்தம், வே. அயினரப்பன் இரா. அகமழகன் பேசுவர்.

சென்னை-வண்ணை இளங்கோ கலை மன்றம்

6—5—56 காலை 9 மணியளவில், மன்றச் சார்பில், தோழர் சோ. கு. சேகர் தலைமையில், 'மே விழா' என்பது பற்றி சொற்பொழிவும், சுகாதார ஊர்வலமும் நடைபெறும்.

விழிப்புடனேயே இருக்கின்றனராம்!

புதுடில்லி, மே 3—

இந்தியாவின் பாதுகாப்பைப் பொறுத்தமட்டில் இந்தியப் பேரரசு தக்க ஏற்பாடுடனும், விழிப்புடனும் இருப்பதாகவும், பாகிஸ்தானில என்ன நடக்கிறது என்பதைக் குறித்து பொதுமக்கள் அச்சங்கொள்ளத் தேவையில்லையென்றும் மத்திய சர்க்கார் துணைப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

ஜப்பானில் சுபாஷ் போஸ் மரண விசாரணைக் குழு

டோக்கியோ, மே. 4—

சுபாஷ் சந்திரபோஸ் எவ்வாறு இயற்கை எய்தினார் என்பதைத் தெரிந்துகொள்ள 4 பேர் கொண்ட இந்திய விசாரணைக் குழு ஒன்று இங்குவந்து சேர்ந்துள்ளது.

18-8-45-ல், பார்மோசாவில், விமானவிபத்தில் போஸ் இறந்ததாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தானில் புதிய மத்திய சர்க்கார்?

கராச்சி, மே 4—

பாகிஸ்தானில் ஒரு புதிய மத்திய சர்க்கார் அமையுமென புதிய குடியரசுக் கட்சி உறுப்பினரான குவாஜ பாசுல்லா பத்திரிகையாளரிடம் அறிவித்திருக்கிறார்.

சென்னை பல்கலைக் கழகக் கட்டிடம் விரிவாகும்

ரூ. 1 கோடி மானியம் கிடைக்கும்

சென்னை, மே 4—

சென்னை பல்கலைக் கழகக் கட்டிடத்தை விரிவாக்குவதற்கும், மற்றும் பல புதிய முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கும் மானியம் தருமாறு பலகலைக் கழக அதிகாரிகள் கேட்டதற்கிணங்க, பல்கலைக் கழக மானியக்குழு சுமார் ரூ. 1 கோடி வழங்கும் எனத் தெரிய வருகிறது.

'காணிக்கை' செலுத்தியும் கண்டு பிடித்துவிட்டனர்!

திருப்பதி, மே 3—

குண்டூரில் திருட்டுப் போனதாக கூறப்பட்ட 'கரன்சி' நோட்டுகளில், ஒரு 100 ரூபாய் நோட்டு, திருப்பதி வெங்கடாசலசுவாமி உண்டியலில் கண்டெடுக்கப்பட்டதாம்.

சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் 9—5—56 புதன்கிழமை மாலை 2 மணிக்கு சேலம் பாங்க் சத்திரத்தில் நடைபெறும். எல்லா மாவட்டக் கழகப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வேண்டப்படுகிறார்கள்.

1. தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோக சம்பந்தமான வழக்கு;
2. மாநில மாநாடு;
3. இதர விஷயங்கள்.

கே. எஸ். பாண்டியன் படிப்பக ஆண்டுவிழா— அழகிரி படத்திறப்பு விழா

சென்னை — திருவல்லிக்கேணி கே எஸ் பாண்டியன் படிப்பக மூன்றும் ஆண்டு விழாவும், அழகிரி படத்திறப்பு விழாவும் 6-5-56 மாலை 5—மணியளவில், திருவல்லிக்கேணி சூரப்பமுதலி தெருவில் (ஐஸ் அவுஸ் அருகில்) தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சொர்ணம், மா. பா. சாரதி, எம். கே. மணி, கோ. தாமோதரன், நெல்லை-கபிலன் பேசுவர்.

தோழர் கண்ணதாசன் மறைந்த மாவீரன் அழகிரி படத்தைத் திறந்து வைப்பார்.

சிதம்பரம் செயராமன் குழுவினர் இன்னிசை விருந்தளிப்பர்.

திருக்குறள் வகுப்பு திறப்பு விழா

6—5—56 காலை 9-30 மணியளவில், சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், பனைமரத்தொட்டி, சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில், நகராண்மைக் கழக ஆணையாளர் திரு. நா. சங்கரன் தலைமையில், திரு. இளவழகனார் திருக்குறள் வகுப்பு திறப்புவிழாவாற்றி 'திருக்குறளின்பம்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுவார். திரு. அ. ஞானசுந்தரம் சொற்பொழிவாற்றுவார்.

சென்னைக் கல்விச் சங்கம்

6—5—56 மாலை 5-மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட் ஆண் பள்ளியில், மேற்படி சங்க ஆதரவில், 'சங்ககாலம்' என்னும் பொருள்பற்றி, திரு. த. வே. முருகேசனார் தலைமையில், திரு. கு. வே. இராமகோடி சொற்பொழிவாற்றுவார்.

பள்ளி ஆண்டுவிழாவும் பெற்றோர் தினவிழாவும்

6—5—56 மாலை 6—மணியளவில், சென்னை—வண்ணை நாடார் பள்ளியின் 4-வது ஆண்டுவிழாவும், பெற்றோர் தினவிழாவும் திரு. புன்னவன (நாடார்) தலைமையில் நடைபெறும். திரு. எஸ். வி. சுப்பையா (நாடார்) மாணவ—மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்குவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

6—5—56 காலை 10-மணிக்கு சென்னை 11-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் தோழர் க. பாலன் தலைமையில் 'அன்றும்—இன்றும்' என்றதலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை — வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

6—5—56 காலை 10-மணிக்கு, தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பாடசாலையில், திரு. பெ. அண்ணாமலை (ரெட்டியார்) அவர்கள், திருக்குறளில் உள்ள இறைவணக்கம் பற்றி விரிவுரையாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.